## பிரிவு 6 - வயது 20க்கு மேல்

பாடல் 1

**தலம்: திருவையாறு** **திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளியது**
**பண்: மேகராகக்குறிஞ்சி** **தாளம்: திருபுடை**

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட்டு ஐம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்று அருள்செய்வான் அமரும் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென்று அஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்கும் திருவையாறே. 1.130.1

**பாடலின் பொருள்:**

மரண பயத்தால் ஐம்புலன்களும் தத்தம் பொறிகளை விட்டு வழிமாறி அறிவழிந்து, சளி தொண்டையில் அடைத்து மனம் வருந்தும் போது, 'அஞ்சேல்' என்றுரைத்து அருள் செய்பவனாகிய சிவபிரான் அமரும் கோயில் திருவையாறு. பெண்கள் நடனம் ஆட, அவ்வாடலுக்கேற்ற கூத்தொலிகளை எழுப்பும் முழவுகள் அதிர, அவற்றைக் கண்டு அஞ்சிய சிலமந்திகள் வானத்தில் கேட்கும் இடியோசை என்றஞ்சி மரங்களில் ஏறி மேகங்களைப் பார்க்கும் திருவையாறாகும்.

பாடல் 2

**தலம்: திருப்பருப்பதம்** **திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளியது**
**பண்: வியாழக்குறிஞ்சி** **தாளம்: ஆதி**

நோய்புல்கு தோல் திரைய நரைவரு நுகருடம்பில்
நீபுல்கு தோற்றமெல்லா நினையுள்கு மடநெஞ்சே
வாய்புல்கு தோத்திரத்தால் வலஞ்செய்து தலைவணங்கிப்
பாய்புலித் தோலுடையான் பருப்பதம் பரவுதுமே. 1.118.2

**பாடலின் பொருள்:**

அறியாமையுள் மூழ்கித் திளைக்கும் நெஞ்சே! நீ போக நுகர்ச்சிக்குரிய இவ்வுடம்பில் இளமை முதல் மாறிவரும் தோற்ற மெல்லாவற்றையும், நோய்கள் தழுவும் தோல் சுருங்கி நரை தோன்றும் நிலையையும், நினைந்து சிந்திப்பாயாக. மூப்பு வருமுன் வாய் நிறைந்த தோத்திரங்களைப் பாடி, வலம் வந்து, தலையால் வணங்கிப் பாயும் புலியின் தோலை உடுத்த பெருமான் எழுந்தருளிய திருப்பருப் பதத்தைப் பரவுவோம்.

<u>பாடல் 3</u>

**தலம்: திருஇன்னம்பர்** **திருநாவுக்கரசு நாயனார் அருளியது**
**பண்: திருவிருத்தம்**

போற்றுந் தகையன பொல்லா முயலகன் கோபப்புன்மை
ஆற்றுந் தகையன ஆறு சமயத்து அவரவரைத்
தேற்றுந் தகையன தேறிய தொண்டரைச் செந்நெறிக்கே
ஏற்றுந் தகையன இன்னம்பரான் தன் இணையடியே. 4.100.7

**பாடலின் பொருள்:**

இன்னம்பரான் தன் இணையடிகள், வழிபடத் தக்கன; கொடிய முயலகனுடைய வெகுளியால் ஏற்பட்ட இழிவைப் போக்கும் தன்மையன; அறு வகைச் சமயங்களைச் சார்ந்த அடியவர்களைத் தெளிவிக்கும் தன்மையன; தெளிவடைந்த அடியவர்களை மேம்பட்ட நெறிக்கண் உயர்த்தும் தன்மையன.

<u>பாடல் 4</u>

**தலம்: பொது** **திருநாவுக்கரசு நாயனார் அருளியது**
**திருத்தாண்டகம்**

நற்பதத்தார் நற்பதமே ஞான மூர்த்தீ
    நலஞ்சுடரே நால்வேதத்து அப்பால் நின்ற
சொற்பதத்தார் சொற்பதமும் கடந்து நின்ற
    சொலற்கரிய சூழலாய் இதுவுன் தன்மை
நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந் தன்னுள்
    நிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யானுன்னை விடுவே னல்லேன்
    கனகமா மணிநிறத்தெங் கடவு ளானே. 6.95.4

**பாடலின் பொருள்:**

வீடுபேற்றினைப் பெறும் தகுதி அடைந்தவருக்கு வீடு பேறு அருள்பவனே, ஞானமே வடிவானவனே! நன்மையை விளக்கும் சுடரே! நான்கு வேதங்களுக்கும் அப்பால் வாக்குகளைக் கடந்து நின்ற பெருமானே! நிற்பது போலக் காட்டி நில்லாது அலைகின்ற உயிரில் வந்து நிலையில்லாத புலாலுடம்பிற் புகுந்து நின்று எல்லாப் பயன்களையும் தரும் கற்பகமே! கனகமும் மாணிக்கமும் ஒத்த நிறத்தினை உடைய எம் கடவுளே. யான் உன்னை விடுவேன் அல்லேன்.

பாடல் 5

**தலம்: திருவாரூர்** **நம்பிஆரூரர் அருளியது**
**பண்: செந்துருத்தி** **தாளம்: திருபுடை**

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று
முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர்
வாழ்ந்து போதீரே. 7.95.1

**பாடலின் பொருள்:**

திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் பெருமானே, உம்மையன்றிப் பிறரை விரும்பாம், உமக்கே என்றும் நீங்காத அடிமை செய்கின்ற ஆட்களாகி, அந்நிலையிலே பிறழாதிருக்கும் அடியார்கள், தங்கள் துன்பத்தை வெளியிட விரும்பாது, மூண்டெரியாது கனன்று கொண்டிருக்கின்ற தீயைப்போல, மனத்தினுள்ளே வெதும்பி, தங்கள் வாட்டத்தினை முகத்தாலே பிறர் அறியநின்று. பின்னர் அத்துன்பம் மிகுதலால் தாங்க மாட்டாது, அதனை, உம்பால் வந்து வாய்திறந்து சொல்வார்களாயின், நீர் அதனைக் கேட்டும் கேளாததுபோல வாளாவிருப்பீர்; இஃதே நும் இயல்பாயின், நீரே இனிது வாழ்ந்துபோமின்!

## பாடல் 6

**தலம்: திருமுருகன்பூண்டி** **நம்பிஆரூரர் அருளியது**
**பண்: பழம் பஞ்சுரம்** **தாளம்: எழுமைச்சாய்ப்பு**

கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்
விரவ லாமைசொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண்
டாற லைக்குமிடம்
முடுகு நாறிய வடுகர் வாழ்முரு
கன்பூண்டி மாநகர்வாய்
இடுகு நுண்ணிடை மங்கை தன்னொடும்
எத்துக் கிங்கிருந் தீர்எம்பி ரானீரே. 7.49.1

**பாடலின் பொருள்:**

எம்பெருமானிரே, முடைநாற்றம் சேய்மையினும் விரையச் சென்று நாறுகின்ற உடம்பையுடைய வடுகர்கள் வாழ்கின்ற இம் முருகன்பூண்டி, வளைந்த கொடிய வில்லையுடைய வடுக வேடுவர், வருவோரைப் பொருந்தாத சொற்களைச் சொல்லி, ‘திடுகு‘ என்றும், ‘மொட்டு‘ என்றும் அதட்டி அச்சுறுத்தி துன்புறுத்தி அவர்தம் உடைகளைப் பறித்துக் கொள்ளும் இடம்; இம்மாநகரிடத்து இங்கு, நுண்ணிய இடையையுடைய எம்பெருமாட்டியோடும் நீர் எதன்பொருட்டு இருக்கின்றீர்?

பாடல் 7

**திருத்தொண்டர் புராணம்** **சேக்கிழார் அருளியது**
**பண்: செந்துருத்தி**

மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளி னாலே
இருந்தமிழ்நாடு உற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழலெம்மாற் போற்ற லாமே.

**பாடலின் பொருள்:**

மங்கையரில் மிகச் சிறந்தவளும், எம் தெய்வமும், சோழரின் குலக்கொழுந்தாக விளங்குபவரும், வளையலை அணிந்த பெருமையுடையவரும், செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற திருமகளைப் போன்றவரும், பாண்டி நாட்டை ஆளும் பாண்டியரின் குலத்திற்கு உண்டான பழியைப் போக்கிய தெய்வத் தன்மையுடைய பாவை போல்பவரும், எங்களுடைய பெருமானாரான சீகாழித் தலைவரின் அருளால் பெரிய தமிழ் நாட்டிற்கு நேர்ந்த துன்பத்தைப் போக்கி, மேலோங்கிய ஒளியைத் தரும் நீருநீற்றைப் பரவச் செய்தவருமான மங்கையர்க்கரசியாரைப் போற்றுபவரின் திருவடிகள் எம்மால் போற்றத்தகுவதாகும்.